# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**வரலாறு** / ඉතිහාසය -I தரம் : 11 நேரம்: 1 மணித்தியாலம்

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக. வினாத்தாள் 1 இற்குரிய புள்ளிகள் 80 ஆகும்.**
(ii) **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என எண்ணிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் எண்ணை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (x) இடுக.**

---

1. மகாவம்சத்தின் முதல் பாகத்திற்கு பின்பு எழுதப்பட்ட சில பகுதிகளுக்கு விளக்கமளிப்பதற்காக எழுதப்பட்ட நூல் எது?
   1.வினய அட்டகத 2. வம்சபாசதிகா 3. ழுவம்சம் 4.ராஜாவலிய

2. கி .பி 12ஆம் நூற்றாண்டில் வரலாற்றை கற்க உதவிய முக்கிய மூலாதாரமாவது எது?
   1.வல்லிபுர பொற்சாசணம் 2.சிதுல்பவ்வ கல்வெட்டு
   3.கழுதிய பொகுன கல்வெட்டு 4.பனாகடுவ செப்புத்தட்டு

3. இற்றைக்கு 125000 ஆண்டுகள் பழமை வாய்ந்த இரணைமடுப் படிவுகளில் கற்காலத்திற்குறிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அவ்வாதாரங்கள் கிடைக்கப்பெற்ற பிரதேசம்
   1.பதிராஜவெல 2.பொத்தானை 3.வெலிமடை 4.உடரஞ்ஞமடம

4. இலங்கையின் முன் வரலாற்றுக் காலத்திற்குறிய பழமை வாய்ந்த ஆதாரங்கள் உள்ளடங்கக் கூடிய காலப்பகுதி எது
   1.கி.மு 450 2.கி.மு 1650 3.கி.மு 2400 4.கி. பி 300

5. புராதன கிராமங்களில் வாழ்ந்த கிராமத்தலைவர்கள் ஒவ்வொருவருடனும் நல்லுறவு ணேி வந்தது தொடர்பாக குறிப்பிடப்படும் கல்வெட்டு
   1.கலுதிய பொகுன கல்வெட்டு 2.பெரியம் புலியம்குளம் கல்வெட்டு
   3.வேவல்கெடிய கல்வெட்டு 4. கோரவக்கல கல்வெட்டு

- பிராந்தி ஆட்சியாளர்கள் பலருடன் சண்டையிட்டு அப்பிரதேசத்தை கைப்பற்றிய அரசன்
- தனது ஆட்சியின் மத்திய நிலயமாக அநுராதபுரத்தை தெரிவு செய்து அதனை நகரமாக கட்டியெழுப்பியவன்
- தனது பத்தாவது ஆட்சிக் காலத்தில் கிராமங்களுக்கு எல்லை வகுத்தவன்

6. மேலே கொடுக்கப்பட்ட தகவல்களுடன் தொடர்புபட்ட இலங்கையின் ஆட்சியாளன் யார்?
   1.பண்டுகாபயன் 2.துட்டகைமுனு
   3.தேவநம்பியதீசன் 4.முதலாம் விஜயபாகு

7. மாந்தோட்ட சர்வதேச துறைமுகத்தை அக்கால அநுராதபுர ஆட்சியாளரிடமிருந்து மீட்டு நாட்டை ஒற்றுமைப்படுத்த தேவையான சகல வேளைகளிலும் ஈடுபட்ட ஆட்சியாளன் யார்,
   1.முதலாம் விமலதர்மசூரியன் 2. தேவநம்பியதீசன்
   3.துட்டகைமுனு 4.முதலாம் விஜயபாகு

8. இரண்டாம் சேன மன்னனின் ஆணைப்படி காணியை வழங்கி அது தொடர்பான சட்டநடவடிக்கையை மேற்கொள்வதற்காக காசியப்பர் எனும் பதிவாளர் நாயகம் வந்ததாக கூறப்படும் கல்வெட்டு
   1.களுதிய பொகுன கல்வெட்டு 2.மெதிரிகிரிய கல்வெட்டு
   3.சிதுல்பவ்வ கல்வெட்டு 4.மிஹின்தல கல்வெட்டு

9. வெளிநாட்டு வியாபார நடவடிக்கைகளை சிறப்பாக பேணிவருவதற்கு தேவையானவைகளை இலங்கை அரசர்கள் முறையாக மேற்கொண்டு வந்தனர் எனக்குறிப்பிட்ட வெளிநாட்டவர் யார்?

1. இபன்பதுாதா  2.றொபட்நொக்ஸ்  3.பிளினி  4.அல்-பல சூரியன்

10. நீரின் செயற்பாட்டு வடிவங்களை அறிந்து கொண்ட எமது கிராம மக்கள் குளத்திற்கு சேர்த்துக் கொண்ட குளஉறுப்பு

1. அலைதாங்கி  2.கலிங்கல்தொட்டி  3.வெளிவான்கதவு  4.குளக்கட்டு

11. புராதன தொழில் நுட்பத்தின் போது பயன்படுத்தப்பட்ட அமுக்கப்பிரயோகம் என்பதன் கருத்து

1.கற்பாறைகளில் இருந்து கற்பாலங்களை புரித்தெடுத்தல்
2.மட்பாண்டப்பாத்திரங்களை பயன்படுத்தி ஒட்சிசன் வழங்கள்
3.ருவன்வெளிசாயவை இடிமின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாத்தல்
4.வனைதல் சில்லு பயன்படுத்தி மட்பாண்டம் தயாரித்தல்

12. புராதன கால மக்கள் சாந்தி பூஜை செய்வதனைக் கொண்டு எதனை எதிர்பார்த்தனர்

1.பயிர்களுக்கு கிருமிகளால் ஏற்படும் தொல்லை நீக்க
2.சேனைப்பயிர் செய்கை ஆரம்பிக்க முன் மிருகங்களை விரட்ட
3.பசுமாடுகளின் பாதுகாப்பு கருதி
4.கிராம மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்க

13. புராதன காலத்தில் இருந்த அளவை முறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன அவை எத்துறை சார்ந்தது எனக் குறிப்பிடுக

A ஹவஜர  B தீதிய  C வச  D தத

1.நில  2.பாரம  3.உயரம்  4.காலம்

14. கி. பி. 9ஆம் நூற்றாண்டில் உள்ள கல்வெட்டுகளில் 'வதால மற்றும் சபாவ' என்ற சொற்களால் அடையாளம் காட்டப்பட்டது எது

1.சட்டமும் அதிகாரமும்  2.அதிகாரமும் நீதிமன்றமும்
3.சட்டமும் நீதிமன்றமும்  4.அதிகாரமும் திறைசேரியும்

15. கீழே கொடுக்கப்பட்டுள X நிரலில் வரி வகைகளும் Y நிரலில் வரி அரவிட்ட துறைகளும் உள்ளன அவற்றை தொடர்புபடுத்தி சரியான விடையை தெரிவு செய்க


| X | Y |
|---|---|
| 1. தக்கபதி | A. அரசனுக்கு சொந்தமான நிலங்களின் பயிர் செய்வதற்காக |
| 2. மதரமஞ்சக | B. பயிர் செய்வதற்காக |
| 3. போஜக்கபதி | C. குளத்தில் நீரைப்பயன்படுத்தவதற்காக |
| 4. கெதிஅட | D. வாய்கால்களில் மீன்பிடிப்பதற்காக |

1.ACDB  2.CDAB  3.DACB  4.BADC

16. புரான இலங்கையில் காசு அச்சிடும் பிரிவுக்கு பொறுப்பாய் இருந்தவரை கல்வெட்டுகளில் எப்பெயர் கொண்டு அழைத்தனர்

1.பனபெடிக  2.பனஅதெக  3.படகாரிக  4.ரூப அதெக

17. கீழே கொடுக்கப்பட்டுள்ள இலங்கைப்படத்தில் A B C D எழுத்துக்களால் காட்டப்படுவது பண்டைய நிர்வாகம் பிரிக்கப்பட்டிருந்த முறையாகும். இதில் மாயரட்டையையும் மலையக ரட்டையையும் காட்டும் எழுத்தை தெரிவு செய்க




1. Bயும் Dயும்  2. Aயும் Dயும்
3. Bயும் Cயும்  4. Aயும் Bயும்

- கீழே ABCD இல் காட்டப்படுவது ஒவ்வொரு காலத்திலும் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் 18,19 ஆம் வினாக்களுக்கு இதன் ஊடாக விடை அளிக்க

A. சிதத் சங்கராவ  B. பாராமீ சதகய  C. குத்தில காவிய
D. ரசவாஹினி  E. சத்தர்மலங்கார

18. தம்பதெனியா காலத்தில் எழுதப்பட்ட இலக்கிய மூலாதாரத்தை கொண்ட எழுத்து.
1. Aயும் Bயும்　2. Aயும் Dயும்　3. Bயும் Eயும்　4. Bயும் Dயும்

19. கம்பளை, கோட்டை காலத்தில் எழுதப்பட்ட நூல்கள்
1. Aயும் Cயும்　2. Bயும் Eயும்　3. Dயும் Eயும்　4. Bயும் Cயும்

20. சீத்தாவாக்கை முதலாம் இராஜசிங்கன் கண்டியை ஆக்கிரமித்த போது போர்த்துக்கேயரிடம் தப்பியோடிய மன்னன்.
1. வீரசுந்தர பண்டார　2. கோணப்பு பண்டார
3. கரலியத்த பண்டார　4. ஜயவீர பண்டார

21. ஆசியாவில் ஐரோப்பாவின் ஆதிக்கப் பரம்பலை ஆரம்பித்து முதன் முறையாக இந்தியாவின் கள்ளிக் கோட்டையை அடைந்த போர்த்துக்கேய இனத்தவர்.
1. லோறன்ஸ் த அல்மேதா　2. வஸ்கொட காமா
3.பிரான்ஸித் த அல்மேதா　4. ஜோரிஸ் வான் ஸ்பில் பேஜன்

22. கீழே கொடுக்கப்பட்டுள X நிரலில் டைப்பெற்ற போர்களும் Y நிரலில் போர்த்துக்கேய தளபதிகளும் கானப்படுகின்றன. அவற்றை தொடர்புபடுத்தி சரியான விடையை தெரிவு செய்க

| X | Y |
|---|---|
| 1. தந்துரைப் போர் | A. கொன்ஸ்தாந்தின் த சூசா |
| 2. பலன போர் | B. தியாகோத மெலோ |
| 3. ரந்தனிவெல போர் | C. போரோ லோபஸ் டி சூசா |
| 4. கன்னெருவ போர் | D. தொன் ஜொரனிமோ டி அசவிடோ |

1. ADBC　2. BCAD　3. CDAB　4. CDBA

23. ஆரம்ப காலத்தில் போர்த்துக்கேயர் இலங்கையை அடயாளப்படுத்திய பெயர்
1.செய்லான்　2. செரன்டிப்　3. சிலோன்　4 இலங்கை

24. யாழ்பாண இராச்சியம் வீழ்ச்சி அடைவதற்கு செல்வாக்கு செலுத்திய காரணியாக எதை காட்டலாம்.
1.முறையான உரிமையாளர் ஒருவர் இன்மை.
2. அரசர்களின் பௌத்த விரோத செயற்பாடு
3. சட்ட ரீதியான இராணுவம் ஒன்று அரசனிடம் காணப்படாமை
4. பொருளாதார சீர்கேடு

25. 17 ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியுாகும் போது பிரித்தானியர் இந்தியாவில் வர்த்தக மைய நிலையமாக நிறுவிக் கொண்ட பிரதேசம் எது.
1. கரிக்கால்　2. பாண்டிச்சேரி　3. தஞ்ஞாவூர்　4. கல்கடா

- பின்வரும் அட்வணையை பயன்படுத்தி 26,27 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| ஆண்டு | இலங்கை வந்த பிரித்தானிய தூதுவர் | மலை நாட்டு அரசன் |
|---|---|---|
| A. 1762 | D. ரொபட் அன்றூஸ் | G. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் |
| B. 1782 | E. ஹியு பொயிட் | H. ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் |
| C. 1795 | F. ஜோன் பைபஸ் | I. ராஜாதி ராஜசிங்கன் |

26. A ஆண்டுடன் தொடர்பு பட்ட தகவல் உள்ளடங்கிய விடை
1. D, I　2. F, G　3. E, I　4. F, I

27. C ஆண்டுடன் தொடர்பு பட்ட தகவல் உள்ளடங்கிய விடை
1. E,J　2. F, H　3. F,G　4. D, I

28. பௌத்த மறுமலர்ச்சி வெற்றி அடைவதற்கு முதன் முதலில் நிறுவப்பட்ட அச்சகம்.
1. லங்கோபகார அச்சகம்　2. லங்கா பிரம விரத அச்சகம்
3. சுதர்சண அச்சகம்　4. சுரசவி சந்தரெஸ அச்சகம்

29. 1883 இல் எகிப்தில் இருந்து இலங்கை வந்த இஸ்லாமிய மறுமலர்ச்சியை வெற்றிகரமாக செய்தவர் யார்
1. அறிஞர் சித்திலெப்பை 2.டீ.பீ ஜாயா 3.நெய்னா மரிக்கார் 4.அலாவுத்தீன்

30. இலங்கையின் வருமானத்தை விட செலவு அதிகரித்ததை கண்டு அதனை ஆய்வு செய்ய நிறுவிய குழுவில் நீதிமன்ற மற்றும் சட்ட நடவடிக்கை தொடர்பாக பரீசீலிக்க நியமிக்கப்பட்டவர்
1. வில்லியம் கோள்புறுக் 2.மியுறன்
3.சாள்ஸ் எச் கமரன் 4.ஹென்றி மக்கலம்

31. குறுமக்கலம் சட்டவாக்க கழகத்தின் ஊடாக அறிமுகம் செய்த முக்கியமான இலட்சணம் என்ன
1. சட்டவாக்கக் கழத்திற்கு முதன்முறையாக வாக்குரிமை மூலம் பிரதிநிதியை தெரிவு செய்தல்
2. இராஜகாரிமுறை நீக்கம்
3. அரச மந்திரி சபை
4. அரச வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டமை

32. கோப்பிக்கான ஏற்றுமதி வரியை குறைக்க நடவடிக்கை எடுத்த பிரித்தானிய ஆளுநர்
1.தோமஸ் மெயிட்லண்ட் 2.எட்வட் பாண்ஸ் 3.ரொபட் சாள்ஸ் 4.ஹென்றிவோட்

33. 'ஹெமீலியா வெஸ்டாக்' எனும வைரஸ் பரவியதால் தாக்கப்பட்ட பயிர் செய்கை
1. தேயிலை 2.கொக்கோ 3.சிங்கோனா 4.கோப்பி

34. தோட்டத் தொழிலாளர்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்
1.வலிசிங்க ஹரிஸ்சந்திர 2.ஏ.ஈ குணசிங்க
3.நடேசர் யர் 4.பியதாஸசிரிசேன

35. இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது அபிவிருத்தித்திட்டம்
1.விக்டோரியா 2. ரந்தெனிகல 3.கல்லோயா 4.கொத்மலை

36. இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன் முறையாக நிறைவேறறு அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்குதெரிவு செய்யப்பட்ட நபர்
1.த.ச ஜயவர்தன 2.வில்லியம் கொபல்லாவ
3.டட்லி சேனாநாயக 4.ன.ள. சேனாநாயக

37. மறுமலர்ச்சி காலத்திற்குறிய இலக்கிய நூல் ஆசிரியர்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்ட விடைத்தொகுதி
1.பெற்றாக் வில்லியம். சேக்ஸ்பியா, ராஸ்மஸ்
2.பொக்காசிக், ரபாயஸ், தாந்தே
3.பிரான்ஸிஸ் பேக்கன், பெற்றாக், சேக்ஸ்பியர்
4.வில்லியம்சேக்ஸ்பியர், தாந்தே, மைக்கல் ஆஞ்ஞுளோ

38. ரோப்பிய மறுமலர்ச்சியால் இலங்கை அரசியலில் ஏற்பட்ட மாற்றம்
1.மலைநாட்டு பயிர்செய்கை ஆரம்பமானமை 2.மேலைநாட்டு கல்வி முறை அறிமுகம்
3.அச்சுக்கைத்தொழில் ஆரம்பமானமை 4.பாராளுமன்ற ஆட்சிமுறை அறிமுகம்

39. கைத்தொழில் புரட்சி ஐரோப்பாவில் ஆரம்பமாவதில் செல்வாக்கு செலுத்திய காரணிகளில் ஒன்று
1.வியாபாரம் 2.அறிவு மறுமலர்ச்சி 3.மறுமலர்ச்சி 4.போக்குவரத்து வளர்ச்சி

40. 19ஆம் நூற்றாண்டின் இறுதிக்காலப்பகுதியில் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கைத்தொழில்துறையில் பாரிய அளவில் முன்னேற்றம் ஒன்றை உருவாக்கிக் கொண்ட ஆசிய நாடு
1.இந்தியா 2.யப்பான் 3.சீனா 4.ஈரான்

(புள்ளி 40×2=80)

# வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
# இரண்டாம் தவணைப் பரீட்சை - 2018

**வரலாறு** / ඉතිහාසය -II     தரம் : 11     நேரம்: 3 மணித்தியாலம்

- **Iம் பகுதியின் முதலாம் வினாக் கட்டாயமானது.**
- **IIம் பகுதியின் (4)நான்கு வினாக்களுக்கும் III ம் பகுதியின் ஒரு வினாக்களுக்கும் விடையளிக்குக.**
- **விடையளிக்க வேண்டிய மொத்த வினாக்கள் (6) ஆறாகும்.**

---

## பகுதி - I

01. (அ) கீழே (I) இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை இலங்கைப் படத்திலும் (II) இன் கீழ் தரப்பட்டுள்ள வரலாற்று இடங்களை உலகப் படத்திலும் குறித்துப் பெயறிடுக.

I). கலா நதி, நாச்சதுவாக்குளம், கிதுல்கல, பெலிலென, கந்தரோடை, கோகர்ணம், கம்பளை, தேவநகர், நீர் கொழும்பு, கல்லோயா, மட்டக்களப்பு, பல்லவங்க, மகாவாலுகாம (புள்ளி 12)

II). கருங் கடல், சீனா, இத்தாலி, மலாக்கா, ஸ்பானியா, மலாக்கா நீரினை (புள்ளி 6)

(ஆ) I). கீழே ABCD யினால் தரப்பட்டுள்ள வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்பு பட்டவர்களை முறையே எழுதுக.

A . சோழரிடம் இருந்து நாட்டைமீட்டு பொலன்நறுவையை தலை நகராக மாற்றிய ஆட்சியாளன்.

B. முதன் முதல் இலங்கைக்கு வருகை தந்த ஒல்லாந்தர்

C. போர்த்துக்கேயர் இந் நாட்டிற்கு வருகை தரும் போது யாழ்பாண இராச்சிய ஆட்சியாளன்

D. இலங்கையின் தேசிய சங்கத்தின் முதலாவது தலைவர். (புள்ளி 4)

II). 1. இங்கு காணப்படும் நிர்மானம் யாது?
2. இது அமைந்துள்ள இராசதானி எது?
3. இது எதற்கு குறுக்காக அமையப் பெற்றுள்ளது?
4. இதை அமைக்கப் பயன்படுத்திய மூலப்பொருள் யாது?


(புள்ளி 4)



A

III). 1. இப்படத்தில் உள்ள நபர் யார்?
2. இவரது நாடு எது?
3. இவரால் நிறுவப்பட்ட அமைப்பு யாது?
4. இவரால் மேற் கொள்ளப்பட்ட சேவை ஒன்றை குறிப்டுக.

(புள்ளி 4)



B

## பகுதி – II

02. 1. கீழே ABC இனால் கொடுக்கப்பட்டுள்ள மூலாதார வகைகளுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.
    - A. தூது காவியம்
    - B. புகழ் காவியம்
    - C. போர்க் காவியம் (புள்ளி 3)

    2. வரலாற்றை கட்டியெழுப்பும் போது இலக்கிய மூலாதாரங்கள் பயன்படுத்துகையில் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் நான்கை குறிப்பிடுக. (புள்ளி 4)
    3. இலங்கை வரலாற்றை அறிந்துக் கொள்வதற்கு மகாவம்சம் முக்கியம் பெறுவதற்கான இரு காரணங்களை கூறி விளக்குக. (புள்ளி 5)
    4. இலங்கை வரலாற்றை கட்டியெழுப்பும் போது தொல் பொருள் மூலாதாரத்தின் முக்கிய பயன்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக. (புள்ளி 6)

03. 1. கீழே ABC இனால் கொடுக்கப்பட்டுள்ள வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கு சொந்தமான இடங்களுக்குறிய வலயங்களை குறிப்பிடுக.
    - A. அலிகல
    - B. பாகியன் கல
    - C. மினிஹாகல்கந்த (புள்ளி 3)

    2. கற்கால யுகத்தின் சடங்கு சம்பிரதாயம் தொடர்பாக தகவல் கிடைக்கப் பெற்ற கற்குகைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 4)
    3. கற்காலயுக மக்களின் வாழ்கை முறையில் காணக்கூடிய இலட்சணங்கள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. (புள்ளி 5)
    4. முன் வரலாற்று காலத்திற்கும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடையே காணக்கூடிய வேறுபட்ட காரணங்கள் மூன்றை கூறி விபரிக்க. (புள்ளி 6)

04. 1. எந்தவொரு நாட்டிலும் நிர்வாகத்தை கொண்டு நடாத்தும் மூன்று தாபணங்கள் காணப்படுகின்றன.அவை மூன்றையும் குறிப்பிடுக. (புள்ளி 3)
    2. சேனைப் பயிர் செய்கையின் போது அறவிடப்படும் வரி வகைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 4)
    3. புராதன இலங்கையின் முன்னேற்றத்திற்கு வர்த்தகம் காணப்பட்டன என்பதனை இரு உதாரணங்கள் மூலம் விளக்குக. (புள்ளி 5)
    4. பல்லினக் கலாச்சாரத்தை கொண்ட இலங்கையினுல் பல்லின மக்கள் பண்டைய காலம் தொட்டு நல்லினக்கத்தோடு வாழ்ந்தார்கள் என்பதற்கு மூன்று காரணங்களை கூறி விளக்குக. (புள்ளி 6)

05. 1. இலங்கையின் இரண்டாம் நகரமயமாக்களுக்கு சொந்தமான பண்டைய நகரங்கள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)
    2. தம்பதெனியா இராசதானியில் மூன்றாம் விஜயபாகுவின் சேவைகள் இரண்டை எழுதுக.(புள்ளி 4)
    3. கோட்டை இராச்சியத்தின் ஆறாம் பராகிரமபாகு மன்னனின் அரசாட்சி காலத்தின் முக்கியத்துவம் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. (புள்ளி 5)
    4. இரண்டாம் நகரமயமாக்களின் போது இலங்கையின் பொருளாதார போக்கின் இலட்சனங்கள் மூன்றை குறிப்பிட்டு விளக்குக. (புள்ளி 6)

06. 1. பிரித்தானியரின் நிர்வாக காலத்தில் இன்நாட்டிற்கு வருகை தந்த மிஷனரி இயக்கங்கள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)
    2. மீகெடுவத்த குனானந்த தேரரினால் மேற்கெள்ளப்பட்ட விவாதங்கள் நான்கை குறிப்பிடுக. (புள்ளி 4)
    3. இந்து சமயம் முன்னேற்றம் தொடர்பாக செயற்பட்ட ஆறுமுக நாவலரின் சேவைகள் இரண்டை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக. (புள்ளி 5)
    4. பிரித்தானியரின் ஆட்சியினால் இலங்கைக்கு கிடைக்கப்பெற்ற நன்மை, தீமைகளை சுருக்கமாக விளக்குக. (புள்ளி 6)

07. 1. யாப்புச் சீர்த்திருத்தம் ஒன்றினை கோரி குடியேற்ற நாட்டின் செயலாளரிடம் கோரிக்கைகளை முன்வைத்த இயக்கங்கள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

2. கீழே ABCD யினால் கொடுக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களுக்குறிய யாப்புகளை முறையே குறிப்பிடுக.

A. சர்வஜன வாக்குரிமையை பெற்ற யாப்பு?

B. கட்டாய சேவை இராஜகாரிய முறையை நீக்கிய யாப்பு.

C. பிரதேசவாரியான பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்திய யாப்பு.

D. இரு சபைகளை கொண்ட பாராளுமன்றத்தை தோற்றுவித்த யாப்பு (புள்ளி 4)

3. கோல்புறூக் சட்டவாக்கக் கழகத்தின் ஊடாக சட்டவாக்கக் கழகத்தின் ஆளுனரின் அதிகாரம் பக்கச் சார்புள்ளதாக இருந்தது. இதனை இரு காரணங்கள் காட்டி விளக்குக. (புள்ளி 5)

4. 1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட தேர்தல் முறை மூன்றையும் குறிப்பிட்டு விபரிக்குக. (புள்ளி 6)

## பகுதி – III

08. 1. மறுமலர்ச்சி காலத்தில் கீழே ABC இனால் கொடுக்கப்பட்டுள்ள நாடுகளை கண்டுபிடித்த நபர்களை குறிப்பிடுக.

A. அமெரிக்கா

B. பிலிப்பீன்ஸ் தீவுகள்

C. மேறகிந்திய தீவுகள் (புள்ளி 3)

2. கீழே ABCD யினால் கொடுக்கப்பட்டுள்ள நிகழ்வுகளுடன் தொடர்புடைய நபர்களை முறையே எழுதுக.

A. கோல்கள் அணைத்தும் சூரியனை சுற்றி நீள்வட்டப்பாதையில் வளம் வருகின்றன.

B. புவி ஈர்ப்புச் சக்தியை கண்டுபிடித்தவர்.

C. முனித உடலில் குருதி சுற்றோட்டத்தை கண்டுபிடித்தவர்.

D. அச்சு இயந்திரத்தை கண்டுபிடித்தவர். (புள்ளி 4)

3. மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான இரு காரணங்களை குறிப்பிட்டு விளக்குக. (புள்ளி 5)

4. மறுமலர்ச்சி காலத்தில் சித்திரம், சிற்பக்கலை என்பவற்றில் ஏற்பட்ட முன்னேற்றத்தை விளக்குக. (புள்ளி 6)

09. 1. கைத்தொழில் புரட்சி ஏற்பட்ட துறைகள் மூன்றையும் குறிப்பிடுக. (புள்ளி 3)

2. கீழே ABCD யினால் கொடுக்கப்பட்டுள்ள வைகளை கண்டுபிடித்த நபர்களை முறையே எழுதுக.

A. ரோலர் இயந்திரம்

B. பாதுகாப்பு விளக்கு

C. ஜெனி இயந்திரம்

D. மின் அடுப்பு (புள்ளி 4)

3. கைத்தொழில் புரட்சியினால் போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட தாக்கங்கள் ஒன்று வீதம் உதாரணத்துடன் விளக்குக. (புள்ளி 5)

4. கைத்தொழில் புரட்சியினால் அரசியல், பொருளாதாரம், சமூகம் போன்ற துறைகளில் ஏற்பட்ட பெறுபேறுகள் ஒன்று வீதம் விபரிக்குக. (புள்ளி 6)